ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2307/40 - 2022 නොවැම්බර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.11.24

*2307/40 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டம் 92 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டத்தின் 92 ஆம் பிரவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர், கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல ஆகிய நான், குறித்த சபைக்கு, கண்டி வடக்கு - பாத்ததும்பர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின், அக்குரணை களஞ்சிய நீர்த்தாங்கி மற்றும் பம்பிக்கும் நிலையத்திலிருந்து திப்பிட்டிய பம்பிக்கும் நிலையம் வரையிலான பிரதான குழாய் வழிகளுக்கான காணித் துண்டுகளின் பயன்பாட்டு உரிமையை சுவீகரித்துக்கொள்வதற்கு தேவைப் பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டுகளின் பயன்பாட்டு உரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

கலாநிதி **கெஹெலிய ரம்புக்வெல,**
நீர் வழங்கல் அமைச்சர்.

நீர் வழங்கல் அமைச்சு,
35, "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்த,
பத்தரமுல்லை.
2022, நவெம்பர் 21.

1A - G 38156 — 10 (2022/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், அக்குரணை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 568, மெல்சேன கிராம உத்தியோகத்தர் பிரிவில், மெல்சேன கிராமத்திலமைந்த, ''தலஹேன'' என குறிப்பிடப்படும் காணியில் மற்றும் இலக்கம் 586 திப்பிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில், திப்பிட்டிய கிராமத்திலமைந்த ''இம்புலேதென்ன'' என குறிப்பிடப்படும் காணியில் கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் பர்ச்சஸ் 11.86 அளவிலான காணித்துண்டுகள் இரண்டு.*

*காணித்துண்டு இலக்கம் : 01*
*காணியின் பெயர் : தலஹேன*
*காணியின் அளவு : பேர்ச் 8.3*

***காணியின் எல்லைகள்:***

*வடக்கு: எச். எம். எம். மன்சில் உரிமை கோரும் இந்த காணியின் எஞ்சிய பகுதி;*
*கிழக்கு: எச். எம். எம். மன்சில் உரிமை கோரும் இந்த காணியின் எஞ்சிய பகுதி;*
*தெற்கு: சஹிராதெனிய இலிருந்து திப்பிட்டிய வரையிலான பிரதேச சபை வீதி;*
*மேற்கு: எச். எம். எம். மன்சில் உரிமை கோரும் இந்த காணியின் எஞ்சிய பகுதி.*

***காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :***

*1. திரு. எச். எம். எம். மன்சில்,*
*இலக்கம் 568/3,*
*நீரெல்ல,*
*அக்குரணை.*

*காணித்துண்டு இலக்கம் : 02*
*காணியின் பெயர் : கிம்புலேதென்ன*
*காணியின் அளவு : பேர்ச் 3.56*

***காணியின் எல்லைகள்:***

*வடக்கு : அலவதுகொட, திப்பிட்டிய வீதியிலிருந்து வீடுகள் வரையிலான பொது வீதி மற்றும் திப்பிட்டிய பம்பிக்கும் நிலையம் அமைந்துள்ள காணி;*
*கிழக்கு : டி. ஜி. பியசேன உரிமை கோரும் இந்த காணியின் எஞ்சிய பகுதி;*
*தெற்கு : எச். எம். எம். மன்சில் உரிமை கோரும் காணி;*
*மேற்கு : அலவதுகொட திப்பிட்டிய வீதியிலிருந்து வீடுகள் வரையிலான பொது வீதி.*

***காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :***

*1. திரு. டீ. ஜி. பியசேன,*
*இலக்கம் 600,*
*திப்பிட்டிய,*
*அலவதுகொட.*

EOG *11 - 0283*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*